நாகப்பட்டிணம் துறைமுகம்

* 877 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து வரும் கப்பல்கள் குறிப்பாக சென்னைக்கு அடுத்தாற்போல் உள்ள நாகப்பட்டினத்தில் மட்டும்தான் பயணிகள் கப்பல் நிறுத்தப்படுவதாகத் தெரிகிறது. அதை முன்னிட்டாவது அந்த நாகைத் துறைமுகத்தை விரிவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு மேலும் வற்புறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அந்த நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் எவ்வளவு சங்கடப்படுகிறார்கள் என்பதை நானே அனுபவித்திருக்கிறேன். ஆனால் இப்போது அந்தத் துறைமுகத்தில் 2 லட்சம் டன் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வசதி இருக்கிறது. அதைவிட விரிவுபடுத்துவதற்கு உடனடியாகத் தேவையில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, சிறு துறைமுகங்களை மேம்பாடு செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டத்தை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சிறு துறைமுகங்களை மேம்படுத்துவது என்பது, நாகப்பட்டினம், குளச்சல் இவைகளுக்கு மட்டுமல்ல, கடலூர் போன்ற துறைமுகங்கள் இருக்கின்றன. கடலூர் விரிவுபடுத்தப்படுகின்றது. அந்த வேலை துவங்கப்பட்டு, அந்தப் பணி நிறைவேறுகிற தறுவாயில் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, நாகப்பட்டினத்தில் கப்பல் ஏறுவதில் எவ்வளவு சங்கடம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே உணர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, கப்பல் ஏறுகிற பிரயாணிகளுக்கு சௌகர்யமாக ஒரு நடைபாலத்தை அந்தக் கப்பல் இருக்கிறவரையில் கட்டுவதற்கு இந்த அரசிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது சாத்தியமான ஒன்றாக இல்லை. ஜெட்டிப் பாலம் நாகப்பட்டினத்தில் ஒரு மைல்கூட இல்லை. 1—2 பர்லாங்குதான் இருக்கிறது. கப்பல்கள் குளச்சல் போன்ற இடங்களில் வருவது போல் கடற்கரைக்கு அருகில் வரும் சாத்தியக் கூறுகள் இல்லை.